# தமிழ் இலக்கியங்களில் சில புதிய பார்வைகள்

முனைவர்
இரா. செல்வக்கணபதி

வள்ளலார் திருநெறி



www.saivamonline.com

# Contact Details


www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online

sspathipagam@gmail.com

+91 94440 21113

G Pay +91 94440 21113

UPI 9444021113@UPI




# 15. வள்ளலார் திருநெறி

## சைவப்பெருமிதங்கள்

சைவ சமயம் காலப் பழமையும், சாலப்பெருமையும் கொண்டு இயங்குவது. பிற சமயங்கள் பலவும், அவற்றைத் தோற்றுவித்தவர் பெயராலேயே பெயர் பெற்றுள்ளன. சிவத்தோடு சம்பந்தம் உடையது சைவம் என்ற கருத்தின் அடிப்படையில், இறைவன் பெயரால் அமைந்த சமயம் சைவ சமயம். பாரத நாட்டின் வட எல்லையாகிய இமயம் தொடங்கி, தென்எல்லையாகிய குமரி வரை, எங்கும் நிலை கொண்டிருப்பது. இந்திய மாநிலங்கள் எங்கும், சிவாலயங்கள் உள்ளன. இந்திய மொழிகள் பலவற்றிலும், சைவம் குறித்த இலக்கியங்கள் ஏராளம் எழுந்துள்ளன. இந்திய நாட்டு மக்கள் தொகையில், சைவ நெறி நிற்பார் எண்ணிக்கையே முதலிடம் பெற்றுள்ளது. இருடிகளும், முனிவர்களும், மகான்களும், கவிஞர்களும் எண்ணற்ற சாத்திர தோத்திர நூல்களைப் படைத்தனர். தென்னாட்டில் குறிப்பாக வடவேங்கடம் தென்குமரி இடைப்பட்ட தமிழகத்தில், 2500 ஆண்டுக்காலத் தெளிவான வரலாற்றைக் கொண்டு இயங்குவது சைவம்.

## ஆறுகளை இணைத்துக்கொண்ட ஜீவநதி

சைவ சமயத்துக்கு நிகராக, இந்தியத் திருநாட்டில் வேறு சில சமயங்களும் வேத நெறிக்கு உட்பட்டுத் தோன்றி வளர்ந்தன.



www.saivamonline.com

குறிப்பிடத்தக்கன வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன. இவற்றுள் வைணவத்தைத் தவிர எஞ்சிய நான்கும், சிவ வழிபாட்டுடன் கலப்புற்றன. தமிழ் நாட்டில் சிவனோடு உறவு முறை கற்பிக்கப்பட்டு இவை பேதமின்றிக் கலந்தன. இக்கலப்பு சைவத்தின் ஊற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் துணையாயின. தொடக்க காலங்களில் வழிபாட்டுச் சமயமாக இருந்த சைவம், கி.பி. 5 ஆம் நூற்றாண்டை ஒட்டித் தத்துவச் சமயமாகவும், உருக்கொண்டது. கி.பி. 7 ஆம் நூற்றாண்டை ஒட்டித் தோத்திரப் பாமாலைகள் கிளைத்தன. பல்லவர், சோழர், பாண்டியர், நாயக்கர் ஆட்சிக்காலங்களில் கற்றளிகள் உருப்பெற்றன. சைவம் முழு வளர்ச்சி பெற்றிருந்த காலத்தில் வள்ளலாரின் வருகை அமைந்தது.

## சைவ - சமய வரம்புகள்

வள்ளலாருக்கு முற்பட்ட காலத்தில் வளர்ந்தமைந்த சைவத்தில் நின்று நிலவிய சில சமய வரம்புகளை நினைவு கூர்தல், வள்ளலார் திருநெறி என்ற தலைப்பிலான ஆய்வுக்குத் துணையாக அமையும்.

சிவனே சைவத்தின் முழுமுதற்கடவுள். சைவத்தின் முதற் பதிவுகள் வேதங்களிலேயே தோற்றம் கொண்டன. சைவத்தின் மூல நூல் வேதங்களும் ஆகமங்களும் புராணங்களுமேயாகும். சிவத்தோடு இணைத்துச் சைவத்தில் சக்தி வழிபாடும் போற்றப் பெற்றது. விநாயகர் மூத்த குமாரராகவும், முருகன் இளைய குமாரராகவும் உறவு முறை கொண்டனர்.

சிவலிங்க வடிவிலேயே சிவ வழிபாடு முதன்மை பெற்றது. சிவ மூர்த்தங்கள் பலவும் தோற்றம் கொண்டன. மூர்த்தி பேதங்கள் பலவும் கற்பிக்கப் பெற்று, சிவ வழிபாட்டில் இணைத்துக் கொள்ளப்பட்டன. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன சிறப்பாக முன் வைக்கப்பெற்றன. சிவ வழிபாட்டுக்கு இணையாக அடியவர் வழிபாடும் போற்றப்பெற்றன. நித்திய நைமித்திக வழிபாடுகள் போற்றப்பெற்றன. தமிழ் நாட்டில் தமிழ் வழிபாடு சிறந்திருந்தது. சிவனுக்கு முன், சாதி, இனம், குலம், கோத்திரம் என்ற பேதங்கள் இல்லாத, மனித குலஒருமை வற்புறுத்தப்பட்டது. சடங்குகளுக்கு மேலாக அன்பே சிறந்த வழிபாடாகக் கருதப்பட்டது.

## சிவமரபில் வள்ளலார்

வடலூர் வள்ளலார், மேற்குறித்துக் காட்டிய மரபு வழிச் சைவ நெறிக் குடும்பத்தில் பிறந்தவர். சிவன் திருநாமங்களுள் ஒன்றாகிய



www.saivamonline.com

இராமலிங்கம் என்பதே அவருக்குத் திருப்பெயராகச் சூட்டப்பட்டது. சிவத்தை வழிபடு கடவுளாகக் கொண்டு, திருநீறு அணிந்து சைவத்திருமுறைகள் ஓதித் தலவழிபாடுகள் மேற்கொண்டு, தம் செந்தமிழ்ப் புலமையால் எண்ணற்ற அருட் பனுவல்களைச் சிவன் தாள் மலர்களுக்கு அவர் சூட்டி மகிழ்ந்தார். மரபு வழிச்சமயத்தில், நால்வர் பெருமக்கள் காலத்திற்குப் பின்னர், சிவசக்தி, விநாயகர், முருகன் மற்றும் சைவ நெறி சார்ந்த பிற தெய்வங்களையும் போற்றிப் பாமாலைகள் எழுந்தன. அவையும் சைவத் திருமுறைகளுள் இணைந்தன. சேக்கிழார் வருகைக்குப்பின் அடியவர்களும் போற்றப்பட்டனர். சிவ நெறிக்குத் தொண்டாற்றியவர்கள் நாயன்மார்கள் எனப் போற்றப்பெற்றனர். அவர்கள் மீதும் அருளாளர்கள் பாமாலைகள் பாடினர். அவையும் பன்னிருதிருமுறைகளுள் ஏற்கப்பட்டன.

## வள்ளலார் போற்றிய தெய்வங்கள்

வள்ளலார் மரபு வழிச் சைவராக நின்று, மேற்குறித்த எல்லாத் தெய்வங்களையும், அடியவர்களையும் போற்றிப் பன்னூறு பாமாலைகள் புனைந்தார். திருமுறைகளைச் சிறப்பித்து உரைகள் நிகழ்த்தினார். புராணப் பிரசங்கங்கள் பல செய்தார். பல நூல்களுக்கு உரை வரைந்தார். நூல் பல பதிப்பித்தார். சைவம் குறித்த உரை நடை நூல்கள் பலவும் இவரால் எழுதப்பெற்றன. தில்லைக் கூத்தனிடம் அளப்பரிய பத்திமை பூண்டிருந்தார். நால்வர் பெருமக்கள் பால் தீவிர அன்பு பூண்டார். வாழையடி வாழையெனச் சைவ மரபில் வந்த ஒருவராகவே அவர் தம்மைக் கூறிக்கொண்டார். சிவநெறியினர் பேதம் பாராது திருமாலையும் போற்றும் நெறிநின்றனர். திருமால், சிவனுக்கு மைத்துனராகக் கருதப்பெற்றார். உமை, திருமாலின் தங்கையாகக் குறிக்கப்பெற்றார். சிவாலயங்களிலேயே திருமால் எழுந்தருளிய விண்ணகரங்களும் அமைந்தன. வள்ளலார், திருமாலையும் புகழ்ந்து பாடியுள்ளார்.

---

*சிவநெறியினர் பேதம் பாராது திருமாலையும் போற்றும் நெறிநின்றனர். திருமால், சிவனுக்கு மைத்துனராகக் கருதப்பெற்றார். உமை, திருமாலின் தங்கையாகக் குறிக்கப்பெற்றார். சிவாலயங்களிலேயே திருமால் எழுந்தருளிய விண்ணகரங்களும் அமைந்தன. வள்ளலார், திருமாலையும் புகழ்ந்து பாடியுள்ளார்.*

---



www.saivamonline.com

## வள்ளலார் காலத் தமிழ்ச் சமுதாயம்

வள்ளலார் பாடியனவாக, இதுவரை 6411 பாடல்கள் கிடைத்துள்ளன. அவற்றை ஆறு திருமுறைகளாகத் தொகுத்துள்ளனர். மூவர்பாடியனவற்றைத் தேவாரம் என்றனர். மணிவாசகர் பாடியன திருவாசகம். சைவ நூல்கள் பன்னிரண்டும் திருமுறை எனக் கூறப் பெற்றன. இவைபோல் வள்ளலார் பனுவல்கள் திருஅருட்பா எனப் பெயர் சூட்டி அழைக்கப்பெற்றன. வள்ளலார் 1823 இல் பிறந்து, 1874 இல் மறைந்தார். இவர் வாழ்ந்த காலம் ஆங்கிலேயர் ஆட்சி செய்த காலம். ஆட்சியாளர் சமயமாகிய கிறித்தவம் ஆதிக்கம் பெற்ற காலம். சைவ-வைணவ வளர்ச்சி தேக்கமுற்றிருந்த காலம். நாட்டு விடுதலை பற்றிய எண்ணம் மக்களிடையே மேலோங்கி நின்றது. தமிழ் மக்கள் சமயம், இனம், மொழி, சாதி எனப் பலவற்றால் பேதமுற்று நின்றனர். மூடப் பழக்க வழக்கங்கள் பெரிதும் ஆட்சி செய்தன. பெண் உரிமை பெற்றிருக்கவில்லை. சைவத்திலும், உயர் சாதிக்காரர்கள் ஆதிக்கமே மோலோங்கி நின்றது. செல்வம் ஒரு சிலரிடமே குவிந்திருந்தது. பலரும் வறுமையில் வாடினர். பசிப்பிணி தலை விரித்தாடியது. நல்லாட்சியும் நாட்டில் இல்லை.

## திருவருட்பா - பகுப்பாய்வு

நாவுக்கரசர், பட்டினத்தார், தாயுமானார், குமரகுருபரர் எனச் சைவ நெறிவந்த பெருமக்கள் வழியிலேயே வள்ளலாரின் முதல் ஐந்து திருமுறைகள் அமைந்தன. சென்னையை அடுத்த திருவொற்றியூர் பற்றிய மாலை வரை எட்டுத் தலைப்புக்களில் பாடல்கள் முதல் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. தவத்திரு ஊரன் அடிகள் 1981 இல் வெளியிட்ட திருவருட்பா முதல் ஐந்து திருமுறைகள். இரண்டாம் பதிப்பில் தெய்வ மணிமாலை முதல் தனித்திருத்தொகை வரை ஐம்பத்திரண்டு உள்தலைப்புக்களில் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இரண்டாம் திருமுறையில் 103 தலைப்புக்களும், மூன்றாம் திருமுறையில் 27 தலைப்புக்களும், நான்காம் திருமுறையில் 41 தலைப்புக்களும் , ஐந்தாம் திருமுறையில் 12 தலைப்புக்களும் இடம் பெற்றுள்ளன. இவையாவும் மரபு வழிச் சைவநெறி நின்றே பாடப் பெற்றுள்ளன.

## முருகன் புகழ் மாலை

திருமுறை ஆசிரியர்களைப் போலவும், பின்வந்த சைவ நூல் ஆசிரியர்களைப் போலவும் வள்ளலார் அருளிய பாடல்களில், சைவ



www.saivamonline.com

மரபும், சைவப் பெருமிதங்களும், சைவத்தின் உயர்ச்சியும் பெரிதும் பேசப்பட்டுள்ளன. அவற்றின் உள்ளீட்டில் சிவமணத்தை நுகரச் சில பனுவல்களை அடையாளப்படுத்துவது வேண்டத்தக்கதாகிறது. முதல் திருமுறை தெய்வமணிமாலையில், சென்னைக் கந்த கோட்டத்து அமர்ந்த முருகன் பெரிதும் சிறப்பித்துப் போற்றப் பெற்றுள்ளான். முருகன் புகழ்மாலைகளுள் மிகச்சிறந்தன இப்பகுதியில் அமைந்துள்ள பாடல்கள்.

*ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற*
*உத்தமர்தம் உறவு வேண்டும்*
*உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்*
*உறவு கலவாமை வேண்டும்*

எனத் தொடங்கி நடையிட்டு, ஒவ்வொரு பாடலும்,

*.......... சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்*
*தலம்ஓங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே*

என நிறைகின்றன.

***திருமுறை ஆசிரியர்களைப் போலவும், பின்வந்த சைவ நூல் ஆசிரியர்களைப் போலவும் வள்ளலார் அருளிய பாடல்களில், சைவ மரபும், சைவப் பெருமிதங்களும், சைவத்தின் உயர்ச்சியும் பெரிதும் பேசப்பட்டுள்ளன.***

## சக்தி தோத்திரங்கள்

இரண்டாம் திருமுறையில், திருவொற்றியூரில் கோயில் கொண்டுள்ள அம்மையை, வடிவுடை மாணிக்க மாலை என்ற பகுதியில் வள்ளலார் போற்றுகின்றார். 101 பாடல்களில் நடையிடும் இந்தத் தேவி தோத்திரத்தில் விநாயகர் காப்பும் முதற்கண் இடம் பெற்றுள்ளது. அம்மையை,

*கடலமுதே செங்கரும்பே அருட்கற்பகக் கனியே*
*உடலுயிரே உயிர்க்குள் உணர்வே உணர்வுள் ஒளியே*
*அடல்விடையார் ஒற்றியார் இடம் கொண்ட அருமருந்தே*
*மடலவிழ் ஞான மலரே வடிவுடை மாணிக்கமே*

எனச் சிவசக்தியாக வைத்துத் துதிக்கிறார். சிவநெறி நின்ற தாயுமானாரும்,



www.saivamonline.com

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் பாடிய குமர குருபரரும், அபிராமி அந்தாதி பாடிய அபிராமி பட்டரும் காட்டிய, அல்லது போற்றிய நெறியிலேயே, வள்ளலாரின் சிவசக்தி தோத்திரங்களும் அமைந்திருப்பது கருதத்தக்கது.

## சிவன் விநாயகர் துதிகள்

தவத்திரு ஊரன் அடிகள் பதிப்பில், மூன்றாம் திருமுறையில் இடம் பெற்றுள்ள திருவடிப் புகழ்ச்சி விண்ணப்பக்கலி வெண்பா, நெஞ்சறிவுறுத்தல் முதலிய பகுதிகள், நெஞ்சுருக்கும் சிவ தோத்திரப் பாமாலைகளாக அமைந்துள்ளன. விண்ணப்பக்கலி வெண்பா,

*சொற்பெறுமெய்ஞ் ஞானச் சுயஞ்சோதி யாம்தில்லைச்*
*சிற்சபையில் வாழ்தலைமைத் தெய்வமே - நற்சிவையாம்*
*தாயின் உலகனைத்தும் தாங்கும் திருப்புலியூர்க்*
*கோயில் அமர்ந்தகுணக் குன்றமே - மாயமிகும்*
*வாட்களமுற் றாங்குவிழி மாதர்மய லற்றவர்சூழ்*
*வேட்களமுற் றோங்கும் விழுப்பொருளே*

என்றெல்லாம் ஆனந்தக் கூத்தனைப் போற்றி நடையிடுகிறது. மூன்றாம் திருமுறையில் பல இடங்களில் விநாயகர் காப்புப் பாடல்கள் வள்ளலாரால் பாடப்பெற்று இடம் பெறச் செய்விக்கப் பெற்றுள்ளன. நெஞ்சறிவுறுத்தல் தொடக்கத்தில்,

*சீர்சான்ற முக்கண் சிவக்களிற்றைச் சேர்ந்திடில்ஆம்*
*பேர்சான்ற இன்பம் பெரிது*

என்றும், சிவ நேச வெண்பாவின் தொடக்கத்தில்,

*முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்*
*சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே - என்னவனே*
*சிற்பரனே ஐங்கரனே செஞ்சடைஅம் சேகரனே*
*தற்பரனே நின்தாள் சரண்*

என்றும், இவ்வாறான விநாயகர் வணக்கப்பாடல்கள் பல திருவருட்பாவில் இடம் பெற்றுள்ளன.

## வைணவம் போற்றல்

சைவ நெறி நின்று சிவனையும், உமையையும், விநாயகனையும், முருகனையும் பாடியதோடு அமையாது வள்ளலார்,



www.saivamonline.com

இரண்டாம் திருமுறையில், இராமநாமசங்கீர்த்தனம், இராம நாமப்பதிகம், வீரராகவர் போற்றிப்பதிகம் எனத் திருமால் பரமான பல பனுவல்களையும் புராணத்தில் இடம் பெறும் இரேணுகாதேவி மீதும் பாமாலைகள் யாத்துள்ளார். திருமகளுக்கும், கலைமகளுக்கும் திருவருட்பாவின் மூன்றாம் திருமுறை இடம் தந்து போற்றுகின்றது. ஐந்தாம் திருமுறையில் ஏனைய மரபு வழிச் சைவ நூலாசிரியருக்கும் மேலாக நின்று சைவ சமயக் குரவர் நால்வரையும், உள்ளமுருகப் போற்றிப் பாடி வள்ளலார் உள்ளம் நைந்துள்ளார். இராம நாமப்பதிகத்தில்,

*மண்ஆளா நின்றவர்தம் வாழ்வு வேண்டேன்*
*மற்றவர்போல் பற்றடைந்து மாள வேண்டேன்*
*விண்ஆளா நின்றஒரு மேன்மை வேண்டேன்*
*வித்தகநின் திருவருளே வேண்டி நின்றேன்*
*புண்ணானா நின்றமன முடையேன் செய்த*
*பொய்அனைத்தும் திருவுளத்தே பொறுப்பாய் அன்றிக்*
*கண்ணாரை அடிக்கமலக் கண்ணா என்னைக்*
*கைவிடில்என் செய்வேனே கடைய னேனே*

என எடுத்து ஆழ்வார்கள்போல் நெஞ்சுருகி விண்ணப்பஞ் செய்கிறார்.

## திருமகளும், கலைமகளும்

மூன்றாம் திருமுறையில் திருமகளுக்கு என ஒரு தனிப்பாடல் வள்ளலாரால் பாடப்பெற்றுள்ளது.

*உலகம் புரக்கும் பெருமான்தன்*
*உளத்தும் புயத்தும் அமர்ந்தருளி*
*உவகை அளிக்கும் பேரின்ப*
*உருவே எல்லாம் உடையாளே*

எனத் தொடங்கிச்

*சலகந் தரம்போல் கருணைபொழி*
*தடங்கண் திருவே கணமங்கைத்*
*தாயே சரணம் சரணம்இது*
*தருணம் கருணை தருவாயே*

என்று நிறைவிக்கிறார். குமரகுருபரரின் சகலகலா வல்லிமாலை போன்று கலைமகளையும் வாழ்த்தி வள்ளலார் மூன்று பாக்கள் வகுத்துள்ளார்.



www.saivamonline.com

*தவளமலர்க் கமலமிசை வீற்றிருக்கும்*
*அம்மனையைச் சாந்தம் பூத்த*
*குவளைமலர்க் கண்ணாளைப் பெண்ணாளும்*
*பெண்ணமுதைக் கோதி லாத*
*பவள இதழ் பசுங்கொடியை நான்முகனார்*
*நாவோங்கும் பாவை தன்னைக்*
*கவளமத கயக்கொம்பின் முலையாளைக்*
*கலைமாதைக் கருதுவோமே*

என்பது வள்ளலாரின் கலைமகள் துதிப்பாடல்களுள் ஒன்று.

## வழிபாட்டில் தமிழ் மக்கள் நிலை

வள்ளலார் வாழ்ந்திருந்த காலத்தில், சராசரியாக வாழ்ந்திருந்த ஒவ்வொரு சைவ சமயியும் சிவனோடு, உமை, விநாயகர், முருகன், கண்ணன், இராமன், கலைமகள், திருமகள், மாரி, காளி என்று பல தெய்வங்களையும் பேதமின்றி வழிபட்டே வந்துள்ளனர். சடங்குகளும், அவற்றின் உண்மைக் காரணமும் காலப் போக்கில் புலப்படாதுபோக, நின்ற மூடப் பழக்கங்களும், மக்களால் நிகழ்த்தப்பட்டே வந்தன. சைவம், சாதி பேதங்களுக்கு ஆதரவு தராதபோதும், சைவ நெறி நின்றவர், சாதி வழி பிரிந்தே நின்றனர். என்றாலும், சாதி மோதல்கள் அக்காலை பெரிய அளவில் இருந்திருக்கவில்லை. சைவம், இறை நிலையில் பெண்மைக்கு உயர்வு தந்த போதும், பெண்ணடிமை வள்ளலார் காலத்திலும் சமூக வழக்காகவே இருந்துள்ளது. ஏழை பணக்காரன் என்ற பேதத்திற்கும் அக்காலத்தில் குறைவில்லை. கடவுளின் பெயரால், உயிர்க்கொலை பழக்கமாகவே இருந்திருக்கிறது. புலால் உண்பார் பலரும் சிவனை இன்று போல் அன்றும் வழிபட்டே வந்துள்ளனர்.

---

*சைவம், இறை நிலையில் பெண்மைக்கு உயர்வு தந்த போதும், பெண்ணடிமை வள்ளலார் காலத்திலும் சமூக வழக்காகவே இருந்துள்ளது. ஏழை பணக்காரன் என்ற பேதத்திற்கும் அக்காலத்தில் குறைவில்லை. கடவுளின் பெயரால், உயிர்க்கொலை பழக்கமாகவே இருந்திருக்கிறது. புலால் உண்பார் பலரும் சிவனை இன்று போல் அன்றும் வழிபட்டே வந்துள்ளனர்.*

---



www.saivamonline.com

## வள்ளலார் சினம்? பின்புலங்கள்

ஏறத்தாழ 50 ஆண்டுக்கால வள்ளலார் வாழ்வில், கடைசி 15 ஆண்டுகளில் மாற்றங்கள் தோன்றியுள்ளன. அவர் பாடிய ஆறாம் திருமுறைப் பாடல்களுள் பல, அவரது முன்னைய கொள்கைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் எதிராக அமைந்தன. சைவ சமயம் வெளிப்படுத்திய உயர் கொள்கை வழி வாழாது, அவற்றுக்கு முரணாக வாழ்ந்த சைவமக்கள் மீது அவர் சினம் கொண்டார். சைவத்தில் சில உயர் சாதிக்காரர்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்துவதையும், சைவக் குருக்கள்மார்களும், ஆதினத்தலைவர்களும், உண்மைச் சைவர்களையும் சாதிவழி மதிப்பிட்டு, மரியாதை வழங்கியதும் அவரைச்சினமடைய வைத்திருக்க வேண்டும். அன்புச் சமயமாகிய சைவத்தில், கடவுள் பெயரால், சிறு தெய்வங்களுக்கு நிகழ்த்தப்பட்டு வந்த உயிர்ப்பலிகளை அவர் வெறுத்தார். புலால் உண்பார் சிவநெறி நிற்பது எங்ஙனம் சாலும் என வினா எழுப்பினார். வாழ்வின் கடைசிப் பகுதியில் சைவத்தைச் சீர்திருத்தும் எண்ணம் செழிக்க மூன்று புதிய அமைப்புகளை உருவாக்கினார்.

1865 இல் சமரச சன்மார்க்க சங்கம்

1867 இல் சத்திய தருமச் சாலை

1872 இல் சத்திய ஞானசபை

என்பன அவரால் உருவாக்கி வைக்கப்பெற்று, நெறிமுறைகளும் அறிவிக்கப்பெற்றன.

---

***சைவத்தில் சில உயர் சாதிக்காரர்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்துவதையும், சைவக் குருக்கள்மார்களும், ஆதினத்தலைவர்களும், உண்மைச் சைவர்களையும் சாதிவழி மதிப்பிட்டு, மரியாதை வழங்கியதும் அவரைச்சினமடைய வைத்திருக்க வேண்டும்.***

---

## சமரச சன்மார்க்கம் என்றால்?

சமரச சன்மார்க்க சங்கம் என்பதன் கொள்கைகளை ஒருவாறு விளக்கித் தவத்திரு ஊரன் அடிகள் பின்வருமாறு கூறுகிறார்.

கடவுள் ஒருவரே என்பதும், அவரை உண்மை அன்பால் ஒளி (ஜோதி) வடிவில் வழிபட வேண்டும் என்பதும், சிறு தெய்வ வழிபாடு



www.saivamonline.com

கூடாது என்பதும், அத்தெய்வங்களின் பேரால் உயிர்ப்பலி கூடாது என்பதும், புலால் உண்ணலாகா தென்பதும், சாதி சமயம் முதலிய எவ்வகை வேறுபாடும் கூடாதென்பதும், எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமையைக் கைக்கொள்ள வேண்டும் என்பதும், ஏழைகளின் பசி தவிர்த்தலாகிய சீவகாருண்ய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல் என்பதும், புராணங்களும், சாத்திரங்களும் முடிவான உண்மையைத் தெரிவிக்க மாட்டா என்பதும், கருமாதி, திதி முதலிய சடங்குகள் செய்ய வேண்டாம் என்பதும் அடிகளின் சமரச சன்மார்க்கக் கொள்கைகளாம் என அப்பகுதி அமைகிறது.

## சாலையும் சபையும்

வள்ளலாரின் தலையாய கொள்கைள் சீவகாருண்யம் என்னும் உயிர் இரக்கமே. இதனை வள்ளலார் இருவகைகளில் வலியுறுத்தினார். 1. புலால்மறுத்தல், 2. அற்றார் அழிபசி தீர்த்தல். அற்றார் அழிபசி தீர்த்தலாகிய சீவகாருண்ய பேரறத்தை நடத்துவதற்காக வடலூரில் சத்திய தருமச் சாலையை வள்ளலார் 23.5.1867 இல் தொடங்கினார். அன்று அவர் ஏற்றிவைத்த அடுப்பு இன்றுவரை எரிந்துகொண்டேயிருக்கிறது.

ஒளி (அருட்பெருஞ்சோதி) வழிபாட்டிற்கென வடலூரில் சத்திய ஞான சபையை அமைத்து 25.1.1872 இல் வழிபாட்டிற்கெனத் திறந்து வைத்தார். சத்திய ஞான சபையை அவர் இயற்கை விளக்கம் என்றார். அகத்தே காணுதற்குரிய அனுபவத்தைப் புறத்தே பாவனையாகக் காட்டுவதே சத்திய ஞானசபை. அருட்பெருஞ்சோதியை மறைத்துக் கொண்டிருக்கும் ஏழு திரைகளும் தத்துவப் படலங்களே என வள்ளலார் குறித்தார். நம்மிடமுள்ள அஞ்ஞானமாகிய திரைகள் நீங்கப்பெற்றால், ஆன்ம ஒளியாகிய அருட்பெருஞ்சோதியைத் தரிசிக்கலாம் என்பது அவர் கருத்து. அகத்தே தாம் பெற்ற அருட்பெருஞ்சோதி அனுபவத்தையே அவர் புறத்தே சபையாக அமைத்துக்காட்டினார்.

மஞ்சள், வெள்ளை நிறம் கலந்த சன்மார்க்கக் கொடி ஒன்றையும் அவர் வடிவமைத்து வழங்கினார்.

*அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ் சோதி*
*தனிப் பெருங் கருணை அருட்பெருஞ் சோதி*

என்பது அவரது தாரகமந்திரமாக அமைந்தது.



www.saivamonline.com

*பசித்திரு, தனித்திரு, விழித்திரு*

என அவர் உபதேசித்தார்.

மேற்குறித்த சங்கம், சாலை, சபை என்பனவற்றை விளக்கிப் பல கவிதைகளையும், உரை நடைப்பகுதிகளையும் அவர் வழங்கியுள்ளார்.

## ஆய்வு முடிவுகள்

இவ்வாய்வின் நிறைவில் கண்டறியப்பட்ட சில உண்மைகளை இங்கே வெளியிடுவது மேலும் இத்தடத்தில் ஆய்வுகள் நிகழத்தத் துணையாகும். மரபு வழிச்சைவ நெறியில் வாழ்வின் பெரும்பகுதியில் பயணம் மேற்கொண்டிருந்த வள்ளலாருக்குக் கடைசி ஆண்டுகளில் ஏற்பட்ட மனமாற்றத்திற்கான காரணங்கள் முற்றாகக் கண்டறியப்பட வேண்டும்.

***சைவத்தின் உயர்கொள்கைகளை முறையாகப் பின்பற்றாதவர்களைத் தெருட்டி, சைவ உயர்நெறி நிறுத்தவே அவர் முயன்றுள்ளமை புலப்படுகிறது. உணவுப் பழக்கங்களை வைத்து ஒரு சிலரைப் புறந்தள்ளுதல் சரியான அளவு கோலாக இருத்தல் இயலாது.***

அவரது தொடக்க காலப் பல தெய்வ வழிபாட்டுக் கவிதைகளும், ஒரே தெய்வக் கோட்பாட்டுப் பிற்காலப் பாடல்களும் கற்பார்க்கு முரண்பாட்டைத் தோற்றுவிப்பதைத் தவிர்க்க வழி காணப்படல் வேண்டும். சைவம் என்பது சில பிறப்பு வழி உயர்சாதிக்காரர்களாலேயே ஏக போகம் உரிமை கொண்டாடப்பட்டு வந்த நிலையில், அச்சாதிகளில் ஒன்றில் பிறவாது வேறு மரபில் வந்தவரை ஏற்றுப் போற்றுவதில் அன்னாருக்குத் தயக்கங்கள் இருந்திருக்கக் கூடுமா?

வள்ளலாரின் மனமாற்றத்தில் தில்லை தீட்சிதர்கள், சைவத்திருமடங்கள், ஆறுமுகநாவலர் போன்றாரின் பங்குகள் எத்தகையன? அவரது மறைவு குறித்த உண்மை யாது?

## வள்ளலார் முன்னிற்பார்

மேற்குறித்த வற்றிற்கு விடை காணும் போது, வள்ளலாரை மரபு வழிச் சைவ நெறியினர் என்ற இடத்தில் நிறுத்துவதா? அவர் நெறி புதுநெறி என்று தனித்து நிறுத்துவதா என்பது அறியவரும். எவ்வாறு ஆயினும் வள்ளலாரின் சமரச சன்மார்க்க நெறி என்பது சைவத்திற்கு மாறான ஒன்று அன்று.

சைவத்தின் உயர்கொள்கைகளை முறையாகப் பின்பற்றாதவர்களைத் தெருட்டி, சைவ உயர்நெறி நிறுத்தவே அவர் முயன்றுள்ளமை புலப்படுகிறது. உணவுப் பழக்கங்களை வைத்து ஒரு சிலரைப் புறந்தள்ளுதல் சரியான அளவு கோலாக இருத்தல் இயலாது. பிணங்களை எரித்தல் கூடாது என்பதும், கருமகாரியங்கள், திதி முதலியன வேண்டா என்பதும் சைவர்கள் தனித்தனியே எடுத்து ஆராய வேண்டுவன.

கூட்டிக்கழித்துப் பார்த்தால் உயிர்க்குலம் அனைத்தும், வேற்றுமை இல்லாது, அன்பில் ஒன்றுபட்டு, ஒரு குடும்பமாக வாழ வேண்டும் என்ற அளப்பரிய நல்லெண்ணமே அவரின் பிற்கால மனமாற்றத்தின் பின்னணி என்பது போதரும். அந்த ஈரநெஞ்சினரின் அருள்பூத்த செந்தமிழ்க் கவிதைகளைச் சைவர்கள் அற்பக் காரணங்கள் காட்டி இழந்துவிடுதல் கூடாது.

உலகம் ஒருகுலமாக ஒன்றுபடும் நாள் ஒன்றில் யாவற்றிலும் மேலாக, சைவம் தந்த, சீர்திருத்த வாதியாக வள்ளலாரே ஒளிபூத்து முன்னிற்பார். இது உறுதி.


www.saivamonline.com